IN THE COURT OF JUDICIAL MAGISTRATE ARAKKONAM, RANIPET DISTRICT
PAGE NO.05/2013

DEPOSITION OF WITNESS

(Chapter XXIIII of Criminal Procedure

| | | |
|---|---|---|
| Calender | : | CC. 231/2012 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution : PW- 13 |

| | | |
|---|---|---|
| Neme | : | பிரித்தா |
| Father's Name | : | தேவேந்திரன் |
| Village | : | காட்டுப்பாக்கம் |
| Taluk | : | அரக்கோணம் |
| Caste | : | - |
| Calling | : | இல்லத்தரசி |
| Religion | : | Hindu |
| Age | : | 25 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 16.02.2021.

*மு.வி.சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்யப்பட்டது.*

*31.10.2007ல் காலை 6.45 மணி அளவில் விபத்து நடந்தது. வண்ணாமேடு என்ற இடத்தில் வேன் கவிழ்ந்தது. நான் அந்த வேனில் பயணம் செய்தேன். என்னுடன் சுமார் 20 பேர் பயணம் செய்தார்கள். அந்த வேனின் நெம்பர் டி.என்.20சி.5676. அந்த வேனை ஓட்டிய நபர் பெயர் தெரியாது. அவரை பற்றிய அடையாளம் தெரியாது. வேனில் சடன்பிரேக் போட்டதால் வேன் கவிழ்ந்தது. வேன் நான் பயணம் செய்தபோது நார்மலாக சென்று கொண்டு இருந்தது வளைவில் சென்ற போது விபத்து*

நடந்தது. எனக்கு விபத்தில் வலது கை தோல்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. என்னுடன் பயணம் செய்தவர்கள் பற்றிய விவரம் ஞாபகம் இல்லை. விபத்து நடக்கும்போது எனக்கு வயது 13. நான் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். மேல் சிகிச்சைக்காக சென்னை இராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரணை செய்தார்கள்.

கு.வி.

நான் பயணம் செய்த அந்த வேன் நெம்பர் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நான் பயணம் செய்த ரோடு குண்டும் குழியுமாக பராமரிப்பு இல்லாமல் விபத்து நடந்து சமயத்தில் இருந்தது என்றால் சரியல்ல நார்மலாக தான் இருந்தது. அந்த வேனில் அன்றைய தினம் கூட்டமாக நிறைய நபர்கள் ஏறியிருந்தார்கள் என்றால் நார்மலாக சீட்டில் உட்காரும் அளவில் தான் இருந்தார்கள். அன்றைய தினம் யாரும் வேனில் நின்று பயணம் செய்யவில்லை அனைவரும் உட்கார்ந்து இருந்தார்கள் என்றால் சரிதான். நான் வேனில் எந்த இடத்தில் எந்த இடத்தில் உட்கார்த்திருந்தேன் என்றால் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்து இருந்தேன் முன் பக்கமா பின் பக்கமா என்று ஞாபகம் இல்லை. அந்த வேனில் நான் பயணம் செய்ததற்கான அத்தாட்சி ஏதாவது வைத்தள்ளேனா என்றால் இல்லை. நான் அந்த வேனில் அன்றைய தினம் செல்லவில்லை என்றாலும் டுவில்லரில் சென்று கீழே விழுந்து அடிப்பட்டு விட்டதாகவும், விபத்து நஷ்டயீடு பெற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.